# பத்திரிக்கை செய்தி

## தலைமை ஆசிரியர் ஆணையை ஒழுங்கு முறைபடுத்துவதற்கும் மற்றும் தேர்வு தரம் உயர்த்துவதற்கான நிலுவை தொகை வழங்குவதற்கும் ரூ.5,000/- லஞ்சம் கேட்டு பெற்ற மாவட்ட கல்வி அதிகாரி கைது

புகார்தாரர் திருமதி.ஸ்ரீதேவி என்பவர் வட்டார கல்வி அலுவலராக நம்பியூர், ஈரோடு மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறார். திருமதி.அமுதா, மாவட்ட கல்வி அலுவலர், திருப்பூர் தெற்கு அவர்கள் புகார்தாரர் திருமதி.ஸ்ரீதேவியிடம் தலைமை ஆசிரியர் ஆணையை ஒழுங்கு முறைபடுத்துவதற்காகவும் மற்றும் தேர்வு தரம் உயர்த்துவதற்கான நிலுவை_தொகை வழங்குவதற்காகவும் தனக்கு லஞ்சமாக ரூ.50,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். திருமதி.அமுதா, மாவட்ட கல்வி அலுவலர், முதல் தவணையாக தலைமை ஆசிரியர் ஆணையை ஒழுங்கு முறைபடுத்துவதற்காக ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திருமதி.ஸ்ரீதேவி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை திருப்பூர் பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 06.07.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.அமுதா, மாவட்ட கல்வி அலுவலர், திருப்பூர் தெற்கு அவர்களிடம் லஞ்ச பணமான ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

**DISTRICT EDUCATION OFFICER WAS ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.5,000/- FOR HEADMASTER REGULARIZATION ORDER AND TO SANCTION THE SELECTION GRADE PAY AND ARREARS**

The complainant Tmt. Sridevi working as Block Educational Officer, Nambiyur, Erode District. Tmt.Amutha, District Educational Officer, Tiruppur South had demanded Rs. 50,000/- as undue advantage from the complainant Tmt. Sridevi, Block Educational Officer, Nambiyur, Erode District on 12.04.2023 for issuing Headmaster Regularization Order and to sanction the Selection Grade Pay and arrears. Tmt.Amutha, District Educational Officer, Tiruppur South demanded Rs.5,000/- as bribe for regularization headmaster as first installment. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tiruppur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (06.07.2023). During the trap proceedings Tmt.Amutha, District Educational Officer, Tiruppur South reiterated her earlier demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested.